www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

1 2 3 1 7

**வகுப்பு : 12**

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு – 2024

## வரலாறு

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி –I

I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக. 10X1=10

1. கீழ்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
அ) மறுமலர்ச்சி ஆ) சமய சீர்திருத்தம் இ) புவியில் கண்டுபிடிப்புகள் ஈ) வர்த்தகப் புரட்சி

2. கீழ்கண்டவற்றில் எது வியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை.
அ) வர்ஜின் ஆப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

3. கூற்று : துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டாண்டி நோபிளின் வீழ்ச்சியும் கிழக்குப் பகுதிக்கு ஒரு கடல் வழித்தடத்தை கண்டுபிடிக்க ஊக்கமாக இருந்தது.
காரணம் : கிழக்கில் இருந்து கிடைக்கும் பொருட்களின் தேவை அதிகரித்ததால் கடல்வழி வாணிபத்தை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் விரும்பின.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) மாண்டெஸ்கியூ – 1. ஜேகோபியர்கள் 3
ஆ) வால்டர் – 2. ஆங்கில நாட்டு தத்துவவாதி 4
இ) பயங்கர ஆட்சி – 3. பதினான்காம் லூயின் காலம் 1
ஈ) ஜான்லாக் – 4. சட்டங்களின் சாரம் 2
அ) 1 3 4 2 ஆ) 4 3 1 2 இ) 4 1 2 3 ஈ) 1 4 3 2

5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு -------- இல் நடைபெற்றது.
அ) 1775 ஆ) 1773 இ) 1784 ஈ) 1799

6. நெப்போலியன் முதல்முறை நாடு கடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்ட இடம்.
அ) எல்பா ஆ) செயின்ட் ஹெலனா இ) கார்சிகா ஈ) வாட்டர்லூ

7. மெக்ஸிக்கோவில் புரட்சிக்கு தலைமையேற்றவர்.
அ) சைமன் பொலிவர் ஆ) ஜோஸ் மரியா மோர்லா
இ) பெர்டினான்டு டி லெஸ் ஸெப்ஸ் ஈ) மிருவல் ஹிடல்கோ

8. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருத்தப்படாத ஒன்றை சுட்டுக.
அ) விடுதலை ஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்
ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்
இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரம் – முதலாம் நிக்கோலஸ்
ஈ) பிரெஸ்ட் லிடாவ்ஸ்க் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்

9. இளம் இத்தாலி இயக்கம் ---------- ஆண்டு துவக்கப்பட்டது.
அ) 1822 ஆ) 1827 இ) 1831 ஈ) 1846

10. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எரிக் ட்ரம்மோண்ட் -------- நாட்டைச் சேர்ந்தவர்.
அ) பிரான்ஸ் ஆ) தென்னாப்பிரிக்கா இ) பிரிட்டன் ஈ) அமெரிக்கா ஐக்கிய நாடு

பகுதி - II

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4x2=8
வினா எண் 17–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

11. 1493 –ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிந்ததென்ன.

12. டிரெண்ட் சபையின் பணி என்ன என்று எடுத்துரைக்கவும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. அமெரிக்க விடுதலைப் போருக்குத் தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன?
14. பீட்டர் லூ படுகொலையின் பின்னணி யாது?
15. இரண்டு சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.
16. வேளாண்மையின் ஏற்பாடுகளின் முக்கியத்துவம் யாது?
17. ஜுட்லாந்து போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்து இயம்புக.

## பகுதி – III

III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x3=12

18. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
19. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
20. ஐரோப்பாவின் எதிர்சமய சீர்திருத்த இயக்கத்திற்கு இயேசு சபையின் பங்களிப்பைப் பற்றி விவாதிக்கவும்.
21. தனது தொழிற்சாலையில் பணியிலிருந்த ஊழியர்களின் முன்னேற்றத்திற்கு இராபர்ட் ஓவன் மேற்கொண்ட முன்னோடி தன்மையிலான நடவடிக்கைகளை பட்டியலிடுக.
22. 1789 – ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துகளின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது – விளக்குக.
23. அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
24. போரில் அமெரிக்கா நுழைந்த பிறகு நிகழ்ந்தவற்றை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுக.

## பகுதி – IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி. 4x5=20

25. அ) பிராட்டஸ்டண்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

(அல்லது)

ஆ) பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலான பிரெஞ்சு புரட்சியின் போக்கினை வரைக.

26. அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கியது? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

(அல்லது)

ஆ) ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது.

27. அ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

(அல்லது)

ஆ) முதல் உலகப் போருடன் தொடர்புடைய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தை காலக் கோட்டில் அமைக்கவும்.

28. அ) முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.
அ) இங்கிலாந்து ஆ) கனடா இ) பசுபிக் பெருங்கடல்
ஈ) ஆஸ்திரேலியா உ) நன்னம்பிக்கை முனை



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com